**<u>CC – 48/2022</u>** Dt: 27.09.2022

எதிரி தரப்பில் கு.வி.மு.ச பிரிவு 311 ன் கீழ் மனு செய்து அந்த மனு Cr.M.P.No.2542/2022 Dt–16.09.2022 ம் தேதி அனுமதிக்கப்பட்டு அ.சா.3 எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 27th day of September 2022.

<u>27.09.2022</u>

<u>அ.சா.3–மீனாட்சி, க/பெ.சக்திவேல்</u>

**<u>1 முதல் 3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

**1)** அசா.1 எனது கணவர் என்றாலும், அசா.2 கொளுந்தனார் என்றாலும் சரிதான். பட்டியல் சாட்சி 4 எனது உடன்பிறந்த சகோதரர் என்றால் சரிதான். பட்டியல் சாட்சி 5 எனது உடன்பிறந்த சகோதரியின் காந்திமதியின் மகன் என்றால் சரிதான். சாட்சிகள் வீடுகள் எல்லாம் எனது வீட்டிலிருந்து 300 மீட்டர் தூரத்தில் உள்ளது என்றால் சரிதான்

**2)** எனது வீட்டிற்கு கிழக்கே உடையார், அழகுமுத்து, தனுக்கொடி ஆகியோர்கள் வீடு வரிசையாக உள்ளது என்றால் சரிதான். இந்த சம்பவத்தின் சத்தம் கேட்டு பக்கத்துவீட்டுக்காரர்கள் வந்தார்களா என்றால் 10 நிமிடம் கழித்து வந்தார்கள்.

**3)** சம்பவம் நடந்து முடிந்தபிறகு தான் 3ம் எதிரி மேகலா வந்தாரா என்றால் இல்லை. சம்பவம் நடந்துக்கொண்டிருக்கும்போது உடையாரும், உடையார் மனைவியும் வந்தார்கள். எனது வீட்டிற்கு பின்பாக உள்ள கருப்பையா வந்தாரா என்றால் எனக்கு பதட்டமாக இருந்ததால் அவர் வந்தாரா என்றால் எனக்கு தெரியவில்லை.

**4)** சம்பவம் நடந்த சமயத்தில் யார் அங்கு வந்தார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் எனக்கு பதட்டமாக இருந்ததால் நான் யாரையும்

கவனிக்கவில்லை. நான் கூறுவது போல் எந்த சம்பவமும் எங்கள் வீட்டில் நடைபெறாததால் தான் பக்கத்துவீட்டுக்காரர்கள் யார் வந்தார்கள் என்று என்னால் குறிப்பிட்டு கூறமுடியவில்லை என்று சொன்னால் சரியல்ல.

**5)** எனது கணவர் எதிரிகளிடம் வரி கேட்காததை ஏன் என்று 2ம் எதிரி கேட்டபோது அசா.2 அவரை அடித்து காயம் ஏற்படுத்திய வழக்கிலிருந்து தப்பிப்பதற்காக இந்த பொய்யான புகார் கொடுத்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்தவிதமான சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.